ISSN:2582-9599

# மலர்களின் குறியீட்டுத் தன்மையில்சங்க கால கைம்பெண்சடங்குகள்

**முனைவர் ம. பிரபு**
உதவிப்பேராசிரியர்தமிழ்த்துறை - சுழற்சி II
துவாரகதாஸ்கோவர்தன்தாஸ்வைணவக்கல்லூரி
அரும்பாக்கம், சென்னை-106.
prabhubalaji985@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கஇலக்கியப்பாடல்கள்பண்டையதமிழர்களின்பண்பாட்டை எடுத்துக்கூறும்ஒருவரலாற்றுஆவணமாகத்திகழ்கின்றன. சங்கஇலக்கியத்தில்இடம்பெற்றுள்ளஒவ்வொருகூறுகளும்தமிழர்பண்பாடுகுறித்தஆய்வுகளுக்குஇன்றளவும்உட்படுத்தப்பட்டுவருகின்றன. அவற்றுள்மலர்கள்குறித்தஆய்வுகள்குறிப்பிடத்தக்கதாகும். புலவர்களின்கற்பனைக்குவளம்சேர்க்கும்விதமாகமலர்கள்குறித்தவருணனைகள்அகம்மற்றும்புறப்பாடல்களில்மிகுதியாகஇடம்பெற்றுள்ளன.

பாடலின்கருத்துக்குப்பின்புலமாகஅமையும்இத்தகையமலர்கள்குறித்தஇயற்கைவருணனைகளைஅம்மலர்களின்குறியீட்டுமொழிகளினூடாகநோக்கும்போதுஅவைசிலபண்பாட்டுத்தரவுகளைஉதிர்த்துச் சென்றுள்ளனஎன்பதைஅறியமுடிகிறது. அவ்வாறு, மலர்களின்குறியீட்டுமொழிகள்வெளிப்படுத்தும்கைம்பெண்சடங்குகள்எனும்நோக்கில், மகளிர்கூந்தலும்மலர்களும், கைம்பெண்அடையும்இன்னல்கள், மகளிர்கூந்தலைமலித்தல்,

அணிகலன்கள்களைதல், கைம்பெண்ணுக்குஅளிக்கப்படும் உணவுகள், உடன்கட்டைஏறுதல்எனும்தலைப்புகளில்இக்கட்டுரைவிளக்குகிறது.

**குறிப்புச்சொற்கள்** – பூத்தருபுணர்ச்சி, கைம்பெண், புல்லரிசி, கூந்தல்மலித்தல்

**முன்னுரை**

உலகஇலக்கியங்கள்பலவற்றுள்தனித்தஅடையாளத்துடன்விளங்குபவைசங்கஇலக்கியங்களாகும். இவ்விலக்கியம்தமிழரின்பண்பாட்டுக்கூறுகளைஎடுத்துரைக்கும்தொல்இலக்கியமாகத்திகழ்கின்றது. சங்கப்பாடல்கள்அகம், புறம்எனும்இருக்கூறுகளைக்கொண்டுள்ளன. இதில்உணவு, உடை, தொழில், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள்எனத்தமிழரின்வரலாற்றைப்பிரதிபலிக்கும்குறிப்புகள்மிகுதியாகக்காணப்படுகின்றன. சங்ககாலத்தமிழர்களின்வாழ்க்கைமுறைமலை, காடு, ஆறு, கடல்என்னும்இயற்கையைச்சூழல்களைமையமாகக்கொண்டுஅமையப்பெற்றனவாகும். எனவே, சங்கஇலக்கியப்பாடல்களில்இயற்கைக்காட்சிகள்குறித்தவருணனைகளும்அவற்றுள்மலர்கள்பற்றியசித்திரிப்புகளும்மிகுதியாகஇடம்பெற்றுள்ளன.

அகம்மற்றும்புறப்பாடல்களில்மகளிர்பண்புநலனையும்தோற்றப்பொலிவினையும்வருணிப்பதற்குமலர்கள்பெரிதும்பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாகமகளிர்உள்ளநிகழ்வைக்காட்சிப்படுத்தும்புலவர்கள்அதனைமலர்களின்குறியீட்டுமொழியினூடாகவேமிகுதியும்வெளிப்படுத்தியுள்ளனர்எனலாம். அவ்வகையில்மகளிர்அடையும்துயரங்களில்ஒன்றானகைம்பெண்சடங்கில்மலர்கள்எவ்வாறுகுறியீடுகளாகச்சித்திரிக்கப்பெற்றுள்ளனஎன்பதை, மகளிர்கூந்தலும்மலர்களும், கைம்பெண்அடையும்இன்னல்கள், மகளிர்கூந்தலைமலித்தல், அணிகலன்கள்களைதல், கைம்பெண்ணுக்குஅளிக்கப்படும்உணவுகள், உடன்கட்டைஏறுதல்என்னும்கூறுகளின்மூலம்இக்கட்டுரைவிளக்கமுயல்கிறது.

**மகளிர்கூந்தலும்மலர்களும்**

மகளிர்கூந்தல்பற்றியும்அவற்றின்மணம்பற்றியும்சங்கஇலக்கியத்தில்பல்வேறுகுறிப்புகள்காணக்கிடைக்கின்றன. அவற்றில்மலர்கள்எவ்வாறுதொடர்புபடுத்தப்பட்டுள்ளனஎன்பதற்கு,

**செறிஎயிற்றுஅரிவைகூந்தலின்**
**நறியவும்உளவோநீஅறியும்பூவே?** (**குறுந்**. 2: 4-5)

எனும்குறுந்தொகைபாடலில்வெளிப்படும்புலவரின்கற்பனைசான்றாகஅமைகின்றது. தலைவன்தன்தலைவியின்கூந்தல்மணம்குறித்துமலரில்தேனுண்டுவாழும்தும்பியிடம்வினவுவதாகஇப்பாடலின்வருணனைஅமைகிறது.

தலைவன்தலைவிக்குமலர்கொடுக்கும்நிகழ்வானதுகளவு, கற்புஎனும்இருநிலைகளிலும்நடைபெறுகிறது. அவற்றில்களவுகாலத்தில்மலர்கொடுக்கும்நிகழ்வை ‘பூத்தருபுணர்ச்சி’

என்றுகுறிப்பிடுவர்.

கற்புவாழ்க்கையின்தொடக்கமானமணநாளில்அப்பெண்ணின்கூந்தலில் அவளதுகாதற்கணவன்பூச்சூட்டும்உரிமையைப்பெறுகிறான்என்பதை,

**நல்மனைவதுவைஅயரஇவள்**

**பின்இருங்கூந்தல்மலர்அணிந்தோயே** (ஐங்கு. 294: 4-5)

எனும்ஐங்குறுநூற்றுப்பாடலடிகள்அரண்செய்கின்றன.

இல்லறவாழ்க்கையில்கணவன்உடன்இருக்கையில்அவன்மனைவிதன்கூந்தலில்பூக்கள்சூடிஅணிகலன்களைஅணிந்துஇன்பத்துடன் இருக்கின்றாள். அத்தகையஆசைகணவன்இறந்துபட்டநிலையில்அவள்தனதுஅணிகளைக்களைந்துஒப்பனைகள்இன்றித்துயருறுகின்றாள். இவ்வாறுஇன்பமும்துன்பமும்கலந்தஇல்லறவாழ்க்கையில்மலர்கள்பெறுகின்றஇடத்தைப்புறப்பாடல்ஒன்றுவிளக்குகிறதுஅவையே,

**புணர்ந்தோர்பூஅணிஅணியபிரிந்தோர்**

**பைதல்உண்கண்பணிவார்ப்புஉறைப்ப** (புறம். 144: 4-5)

என்பதாகும். எனவேமகளிர்கூந்தல்ஒப்பனைகளோடுதொடர்புடையமலர்கள்அவர்கள் அடையும்மகிழ்ச்சிமற்றும்துயரத்தின்குறியீடாகவும்விளங்கியுள்ளனஎன் பதைமேற்கண்டசான்றுகள்தெளிவுபடுத்துகின்றன.

**கைம்பெண்அடையும்இன்னல்கள்**

தலைவன்போர்மற்றும்பிறகாரணங்களால்தலைவியை விட்டுப்பிரிந்துசெல்கிறான். இதனைத்தாங்கிக்கொள்ளாதுதுயரம்அடைகிறாள்தலைவி. இதுஅகப்பாடல்களில்மிகுதியும்இடம்பெறுகின்றஒருநிகழ்வாகும். அவ்வாறுதலைவியின்துயர்குறித்துவரும்இப்பாடல்களில்மலர்ச்சூடுத லைத்தவிர்த்தல், அணிகலன்களைவெறுத்தல், ஒப்பனைகள்இன்றித்தனிமையில்இருத்தல்போன்றவைஅவளதுதுயரத் தைக்குறிப்பால்சுட்டுவதாகஅமைகின்றன. இவற்றின்நீட்சியாகமலர்களையும்மகளிரையும்மையமாகக்கொண்டுசில சடங்குகள்நிகழ்த்தப்பட்டுள்ளனஎனலாம். அதாவதுகணவன்இறந்தநிலையில்அவனதுஉரிமைமகளிர்க்குச்செய்யப் படும்இறப்புச்சடங்குகளாகும். ‘கூந்தல்மலித்தல்’, ‘பூக்களைநீக்குதல்’, ‘அணிகலன்கள்களைதல்’ போன்றவைஅவற்றுள்குறிபிடத்தக்கவைகளாகும். மேலும் ‘புல்லரிசிஉ ண்ணுதல்’, ‘வண்ணஆடைகள்தவிர்த்தல்’, ‘கற்படுக்கையில்உறங்குதல்’ என்னும்இன்னபிறகட்டுப்பாடுகள்விதிக்கப் பட்டுள்ளதையும்காணமுடிகிறது.

இறந்தகணவனுக்குமூட்டப்பட்டதீயில்அவனதுஉரிமைமகளிரும்பு குந்துதன்உயிரினைமாய்த்துக்கொள்ளுவர். இத்தகுதீப்புகும்நிகழ்வுபற்றியகுறிப்புகளும்ஒருசிலபாடல்களில்காணப்ப டுகின்றன. பாண்டியன்நெடுஞ்செழியன்இறந்தபோதுஅவனதுமனைவி கோப்பெருந்தேவிதீப்பாய்வதற்குத்துணிந்தநிகழ்வுஇதற்குச்சான்றாகும். எனவேஇத்தகையகைம்பெண்சடங்குமுறைகளில்மலர்கள்இடம்பெறும்

பாங்கினைப்பற்றியும்அவற்றின்குறியீட்டுமொழியினூடாகவெளிப்படும்பல்வேறுகருத்துகளையும்பின்வரும்தலைப்புகள்எடுத்தியம்புகின்றன.

**கூந்தல்மலித்தல்**

கணவன்இறந்தநிலையில்அவனதுமனைவியின்கூந்தலிருந்துமலர்கள்களையப்படுகிறது. இன்றுவரைஇறப்புச்சடங்கின்ஒருநிகழ்வாகஇது பின்பற்றபடுகிறது. கைம்பெண்களுக்குஎனநடைபெறும்இத்தகையசடங்குகளில்அப்பெண்ணின்கூந்தல்மலிக்கப்படுகின்றநிகழ்வுகளும்பண்டையவழக்கில்இருந்துள்ளன. அதற்கு,

**கண்ணீர்த்தடுத்ததண்நறும்பந்தர்**
**கூந்தல்கொய்துகுறுந்தொடிநீக்கி** (புறம். 250: 3-4)

எனும்புறநானூற்றுப்பாடலடிகளைச்சான்றுகாட்டலாம்.

மகளிர்கூந்தலும்அதில்சூட்டப்படும்மலர்களும்அவளதுகாதற்கணவனைக்குறிப்பால்சுட்டுவதாகஅமைகின்றன. மேலும்நாடாளும்வேந்தனின்போர்ஆற்றலைச்சுட்டுவதற்கும்மகளிர்கூந்தல்முன்னிறுத்தப்பட்டுள்ளதைச்சங்கப்புறப்பாடல்களில்காணமுடிகிறது. தோல்வியுற்றவேந்தனைஇழிவுபடுத்தும்வகையில்அவனதுமனைவியரின்கூந்தலைமலித்தலும்பின்அக்கூந்தலைக்கயிராகத்திரித்துத்தன்தேரினைஇழுப்பதற்குப்பயன்படுத்துதல்எனும்போர்நிகழ்வைஇதற்குச்சான்றாகக்கூறலாம்.

ISSN:2582-9599

எனவேபோர்ச்சூழலில்மனைவியின் (தலைவியின்) கூந்தலை மலித்தல்என்பதுகணவனின் (தலைவன்) வீரத்திற்குஇழுக்காகக்கருதப்பட்டுள்ளதைஇங்குஉய்த்துணமுடிகிறது.

இவ்வாறுதலைவனின்வீரத்திற்குஅடையாளமாகவும்தலைவியின் கற்புவாழ்க்கைக்குக்குறியீடாகவும்விளங்கும்கூந்தலைப்பிறஆடவரால்தீண்டப்படுவதுதமிழர்மரபன்றுஎன்றகருத்தை

**நாறுஇருங்கூந்தல்கிழவரைப்படர்ந்தே** **(புறம்**. 113: 9)

எனும்கபிலரின்இப்பாடலடிஅரண்செய்கிறது.எனவேகைம்பெண்சடங்கில்மலர்களைக்களைதலும்அம்மலரினைச்சூடியகூந்தலைமலித்தலும்எனமகளிர்அடையும்துயரத்திற்குகுறியீடாகமலர்கள்விளங்குவதைக்காணமுடிகிறது.

**கைம்பெண்சடங்கில்அணிகளைக்களைதல்**

வேந்தன், குறுநிலமன்னன், போர்வீரன்போன்றோர்இறந்துபட்டநிலையில்அவர்களின்உரிமைமகளிர் தங்கள்அணிகளைநீங்குகின்றனர்.இத்தகையகைம்பெண்சடங்குகள்உவமை, உருவகத்தின்வாயிலாகசங்கஇலக்கியப்பாடல்களில்வெளிப்படுகின்றன. அதில்மலர்கள்குறியீடாகஇடம்பெற்றுள்ளனஎன்பதுகுறிப்பிடத்தக்கதாகும்.அவ்வாறுகரிகால்பெருவளவத்தான்இறப்புப்பற்றிக்குறிப்பிடப்படும்பாடலில்அவனுடையஉரிமைமகளிர்அடைந்ததுயரம்பற்றியும்அத்துயரத்தின்வெளிப்பாடாகஅமையும்அணிகள்களைகின்றநிகழ்விலும்மலர்கள்உவமையாகச்சித்திரிக்கப்படுகிறது. இதனை,

**பூவாட்கோவலர்பூவுடன்உதிர**

**கொய்துகட்டுஅழித்தவேங்கையின்**

**மெல்இயல்மகளிரும்இழைகளைந்தனரே** (புறம். 224: 15-17)

எனவரும்பாடலடிகள்தெளிவுபடுத்துகின்றன. இப்பாடலில்பொன்னிறவேங்கைமலர்கள்மகளிர்அணிந்துள்ளஅணிகளாகஉவமிக்கப்பட்டுள்ளன. மேலும்பூவுடன்திகழ்ந்தவேங்கையின்கிளைகளைவெட்டியதுபோலசோழனின்மனைவிதனதுஅணிகளைநீங்குகின்றாள்எனமலர்களைக்குறியீடாகக்கொண்டுசித்திரிக்கப்பட்டுள்ளதைக்காணமுடிகிறது.

புலவர்பெருஞ்சித்திரனாரின்குடும்பம்பலநாள்களாகவறுமையில்வாடுகிறது. இதனைப்போக்கமன்னன்இளவெளிமானிடம்பொருள்பெறவேண்டிஅவனைக்காணவருகிறார். ஆனால்அவன்இறந்துவிட்டான்என்றசெய்தியைக்கேட்டுஅவர்வருந்துகிறார். இறப்பின்துயரத்தைக்காட்சிபடுத்தும்விதமாகவரும்சங்கப்பாடலில்அவனதுஉரிமைமகளிரின்கைம்பெண்சடங்குகுறிப்பிடப்படுகிறது. அவையே,

`இளவெளிமான்இறந்ததால்அவன்உரிமைமகளிர்மார்பில்கைகளைஅறைந்துஅழுகின்றனர்எனவும். அப்பொழுதுஅவர்களின்கைவளைகள்உடைந்துகீழேவிழுகின்றகாட்சிவாழைப்பூகாம்புகழன்றுசிதறிவிழுகின்றதுபோல்உள்ளதுஎனவும்அப்பாடலி

ISSN:2582-9599



ல்சித்திரிக்கப்பட்டுள்ளது.’ எனவேசிதறிவிழும்வாழைப்பூவின் வடிவம்உடைந்துவிழும்அணிகலன்களுக்குக்குறியீடாகஉவமிக்கப்பட்டுள்ளதைஉய்த்துணரமுடிகிறது.

**கைம்பெண்களுக்குஅளிக்கப்படும்உணவுகள்**

கைம்பெண்களுக்குஅளிக்கப்படும்உணவிலும்மலர்கள்இடம்பெற்றுள்ளன. என்பதை, “**சிறியவெண்மையானஆம்பல்முன்புநாம்இளமையுடன்இருக்கும்காலத்தில்தழையாடையாகஇருந்துஉதவின. இப்பொழுதுபெரியசெல்வத்தையுடையகணவன்இறந்தபிறகுஉண்ணும்வேளைத்தவறிதுஞ்சும்பொழுதில்உண்பதற்குஅல்லியிடத்துஉண்டானபுல்லரிசியைத்தந்துதவின**” (**புறநானூறுமூலமும்உரையும். ப.** 575) இவ்வுரைக்குறிப்புதெளிவுபடுத்துகிறது.

ஆம்பல்மலர்குளம், ஏரி, குட்டைஎன்னும்நீர்நிலைகளில்வளரக்கூடியஒருவகைநீர்ப்பூவாகும். இதனைமருதநிலத்துமாந்தர்கள்ஒப்பனையாகச்சூடிமகிழ்வர். அம்மலரில்காணப்படும்ஒருவிதஅரிசிமகளிர்இறப்புச்சடங்கில்இடம்பெற்றுள்ளதைமேற்கண்டகூற்றுஅரண்செய்கிறது. இதேபோன்றுமூங்கிலிருந்துபெறப்பட்டஅரிசிஉணவோடுஉப்பின்றிவேகவைத்தவேளைக்கீரைகைம்பெண்களுக்குஅளிக்கப்படும்உணவுகளாகஇருந்துள்ளதுஎன்பதையும்சங்கப்புறப்பாடலில்குறிப்பிடப்பட்டுள்ளது. இளமைகாலத்தில்மகளிர்ஒப்பனைக்குஉதவியமலர்கள்பின்னாளில்அவர்களின்கைம்பெண்நோன்பில்உண்ணும்உணவாகவும் (புல்லரிசியாகவும்) அமைந்துள்ளதுஎனலாம். எனவேமலர்கள்குறியீட்டுமொழியில்மட்டுமின்றிபயன்பாட்டுஅடிப்படை

யிலும்கைம்பெண்சடங்கில்இடம்பெற்றுள்ளனஎன்பதைஅறிய முடிகிறது.

**உடன்கட்டைஏறுதல் (அ) தீப்புகும்சடங்கு**

கணவனைஇழந்தபெண்ணுக்குநிகழ்த்தப்பட்டகொடுமையானசடங்குகளில்ஒன்றுஉடன்கட்டைஏறுதல்எனும்தீப்புகும்நிகழ்வாகும்.புறநானூறுமற்றும்ஐங்குறுநூற்றுப்பாடல்களில் இச்சடங்கினைப்பற்றியசிலகுறிப்புகள்காணப்படுகின்றன. அவ்வாறுபுறநானூற்றில்இடம்பெறும்பெருங்கோப்பெண்டுவின்பாடல்ஒன்றில்தீப்புகும்நிகழ்வுபற்றிக்குறிப்பிடப்படுகிறது. அதில் பெருங்கோபெண்டுதன்கணவன்இறந்தபிறகுதான்உயிர்வாழ்தல்எத்தகையகொடுமையானதுஎன்பதை, ‘வெள்ளரியின்விதைப்போன்றுவிளங்கும் அரிசிசோற்றில்நீர்நிறைத்துஅவற்றுடன்எள்ளுத்துவையலும்புளியுடன்சமைத்தவேளைக்கீரையும்உணவாகக்கொடுப்பர்என்றுதன்துயரத்தைக்கூறி’ இத்தகையகொடுமைகளைத்தாங்கிஉயிர்வாழ்வதைவிடஎன்கணவனுடன்மாய்வதேமேலானதுஎன்றுதீக்குள்புகுவதற்குத்துணிகிறாள். இதனை,

**பெருந்தோட்கணவன்மாய்ந்தெனஅரும்புஅற**

**வள்இதழ்அவிழ்ந்ததாமரை**

**நள்இரும்பொய்கையும்தீயும்ஒன்றே** (புறம். 246: 13-15)

எனும்புறநானூற்றுப்பாடலடிகள்தெளிவுபடுத்துகிறது.

ISSN:2582-9599

இப்பாடலில்தீயின்அனலினைக்குறித்தவருணனையாகத் தாமரைமலரின்செம்மைநிறமும்தீயின்வெம்மைக்குத்தாமரையின்தண்மை (குளிர்ச்சி) உவமிக்கப்பட்டுள்ளதைக்காணலாம். கைம்பெண்களுக்குத்தாமரைமலர்நிறைந்தபொய்கையும்விறகால்தீமூட்டப்பெற்றதகனமேடையும்ஒன்றுதான்என்பதை, மலர்களின்நிறம்மற்றும்தண்மையைக்குறியீடாகக்கொண்டுசித்திரிக்கப்பட்டுள்ளதைஅறியமுடிகிறது.

சங்கஅகநூலானஐங்குறுநூற்றுப்பாடல்ஒன்றில்பொன்னிறஇலவமலர்களைக்கற்பனையாகக்கொண்டுதீப்புகும்நிகழ்வுகாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இலவமரத்தில்இலைகள்அனைத்தும்உதிர்ந்தநிலையில்மலர்கள்மட்டும்நிறைந்துகாணப்படுகின்றது. அப்பொழுதுமயில்ஒன்றுஅம்மரத்தில்வந்துஅமர்கிறது. இந்தஇயற்கைக்காட்சியைக்காணும்புலவர்க்கு,

…… …… …. **முள்ளுடை**

**இலவம்ஏறியகலவமஞ்ஞை**

**எரிபுகுமகளிர்ஏய்க்கும்** **(ஐங். மிகை. 1-3)**

கணவனைஇழந்தமகளிர்தீப்புகும்நிகழ்வானஇறப்புச்சடங்குநினைவுக்குவருகிறது.

மயிலினைத்தலைவிக்கும்பொன்னிறஇலவமலர்கள்தீப்பிழம்பிற்கும்ஒப்புமைப்படுத்திஅதைமகளிர்தீப்புகும்சடங்கோடுஉவமிக்கப்பட்டுள்ளதைமலர்களின்குறியீட்டுமொழியினூடாகஉய்த்துணரமுடிகிறது. சங்ககாலசமூகத்தில்நிலவியபலவகைச்சடங்குகளுடன்கைம்பெண்சடங்குகளும்குறிப்பிடத்தக்கவகையில்அமைந்துள்ளன.

அவற்றில்உடன்கட்டைஏறுதல்எனும்தீப்புகும்நிகழ்வுகள்பாடலின்வருணனையாகமட்டும்சிலஇடங்களில்சுட்டப்படுதலேயன்றிவலிந்துகடைப்பிடிக்கபட்டவழக்கமாகஎவ்விடத்திலும்குறிப்பிடப்படவில்லை.

**தொகுப்புரை**

பழந்தமிழர்களின்வாழ்க்கைமுறைஇயற்கையோடுஇயைந்தஒன்றாகஅமைந்துள்ளது. அவற்றைப்பிரதிபலிக்கும்விதமாகஎண்ணற்றஇயற்கைக்காட்சிகளின்பின்னணியில்இவ்விலக்கியத்தின்பாடுபொருள்கள்சித்திரிக்கப்பட்டுள்ளன. அத்தகையஇயற்கைக்காட்சிகளில்மணம், நிறம், வடிவம், தண்மைஎனமலர்கள்குறித்தவருணனைகள்மிகுதிஎனலாம். இயற்கையில்பூத்துக்குலுங்கும்மலர்கள்புலவர்களின்இலக்கியஆக்கத்தில்பல்வேறுபரிணாமங்களாய்வெளிப்படுகின்றன. குறிப்பாகஉணவு, உடை, அணிகலன்போன்றபயன்பாட்டுநோக்கிலும்நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள்போன்றவற்றில்குறியீட்டுத்தன்மையிலும்தமிழர்களின்பண்பாட்டைப்பிரதிபலிப்பதில்முக்கியப்பங்குவகிக்கின்றன. எனவேசங்கப்பாடல்களில்இடம்பெறும்மலர்களின்குறியீட்டுமொழிகள்தமிழர்களின்பண்பாட்டுஅடையாளங்கள்வெளிப்படுத்தும்ஒருகூறாகவும் சங்ககாலச்சமூகச்சூழலைப்புலப்படுத்தும்ஒருகருவியாகவும்விளங்குகின்றன என்பதைமேற்கண்டகைம்பெண்சடங்குகள்தெளிவுபடுத்துகின்றனஎன்றுகூறிஇக்கட்டுரைநிறைவுபெறுகிறது.

## துணைநூற்பட்டியல்

1. தட்சிணாமூர்த்தி, அ.,– ஐங்குறுநூறுமூலமும்உரையும், (உ.ஆ) நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை, 2007.

2. நாகராசன், வி., – குறுந்தொகைமூலமும்உரையும், (உ.ஆ) நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை, 2007.

3. பாலசுப்பிரமணியன், கு. வெ., – புறநானூறுமூலமும்உரையும், (உ.ஆ) நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை, 2007.